# கோவையில் உலக டுஷீன் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தின விழா நிகழ்ச்சி




கோவை,செப்.11-

கோவையில் உலக டுஷீன் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

உலக அளவில் டுஷீன் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப் படுவதை முன்னிட்டு மர பணு பரிசோதனை, கலந்தாய்வு, பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 50க்கும் மேற்பட்ட டுஷீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்கு ஒரு சிறப்பு விழாவை ஜென்னீஸ் கிளப் புல்வெளி அரங்கில் ஏற்பாடு செய்திருந்தது. இவ்விழாவிற்கு கோவை அரசு மருத்துவக்கல்லூரி டீன் டாக்டர் பி. அசோகன் தலைமை தாங்கினார். ராயல் கேர் உயர் சிறப்பு மருத்துவ மனை சேர்மன் டாக்டர். மாதேஸ்வரன் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். தன்னார்வ நிறுவனர் முனைவர் பி.ஆர். லட்சுமி வரவேற்புரை வழங்கினார். பின்னர் அவர் பேசும் போது கூறியதாவது:

உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. இந்நோய் மரபு வழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோய்க்கு மருந்து இன்றளவிலும் கண்டறியப்படவில்லை. நாம் கற்ற அறிவியல் சமுதாயத்தை சென்றடைவதே இதன் நோக்கமாகும். டுஷீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்திற்காக 122 ஆண்டுகளாக சேவையாற்றி வருகிறது.

மேற்கண்டவாறு அவர் கூறினார். முன்னதாக டுஷீன் குழந்தைகள் கலை நிகழ்ச்சி நடைபெற்றது கீதாஞ்சலி பள்ளி மாணவியர் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. குழந்தைகள் பட்டங்கள் பறக்க விட்டும், பலூன்களை சேர்த்து ஆகாயத்தில் பறக்க விட்டும் மகிழ்ந்தனர். குழந்தைகளின் ஆடல் பாடல் நிகழ்ச்சியில் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.